செய்தி வெளியீடு எண்: 410

நாள்: 31-7-2014

செய்தி வெளியீடு

**தமிழ்வளர்ச்சித் துறை**

**சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குதல்**

தமிழ் வளர்ச்சித் துறையில் செயற்படுத்தப்பெறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் 2013ஆம் ஆண்டில் (01.01.2013 முதல் 31.12.2013 வரை) வெளியிடப் பெற்ற நூல்களுக்கான பரிசுப் போட்டி 33 வகைப்பாடுகளில் நடத்தப்பெறுகின்றன. ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூல் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு நூலாசிரியருக்கு ரூ.30,000/–மும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/-மும் பரிசாக வழங்கப்பெறும். போட்டிக்குரிய நூல்களின் விண்ணப்பங்களை நிறைவு செய்து அனுப்புவதற்கான இறுதி நாள் **31.07.2014** மாலை **5.45** மணி வரை என **தினத்தந்தி** மற்றும் **தினமணி** ஆகிய நாளிதழ்களில் **09.06.2014** அன்று வெளியிடப்பெற்றன. தற்பொழுது நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு அனுப்புவதற்குரிய இறுதி நாள் **15.08.2014** மாலை **5.45** மணி வரை என காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9